எடுக்க முயற்சி செய்யலாம். ஆகையினால் அந்த அடிப்படையில் சென்சஸ் ரிப்போர்ட்டுகள் வந்தபிறகு தான் பல பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டியிருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதியை ஒழிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. ஆகவே மாநிலத்திலுள்ள ஜாதிகளைக் குறைக்க, இப்படி பல்வேறு முனைகளிலிருந்து வரும் வேண்டுகோளுக்கு இணங்கி அவைகளை ஒருங்கிணைத்தால், ஜாதிப்பிரிவுகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாமே, அந்த வகையில் ஒரு குழுவை அமைக்க அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தின் முன் எல்லோரும் ஒன்று என்பது உண்மைதான் என்றாலும் கூட, நூறு, ஆயிரம் ஆண்டுக்காலமாக பிற்படுத்தப்பட்டு வாழ்க்கையில் பின் தங்கிய நிலையில் உள்ளோர் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த, இப்படி பல பிரிவுகள் இருந்தால், அதனைக் குறிப்பிட்டு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளை கொடுக்க முடியும் என்ற அடிப்படையில்தான் அரசாங்கம் இப்படி இயங்கி வருகிறது. நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற நிலை, எண்ணங்கள் வளர வளர, வாழ்க்கைத்தரம் உயர உயர, மக்களிடையே கூட தானாக ஏற்படக் கூடும். அது வரவேண்டும் என்றுதான் நாம் அனைவரும் விரும்புகிறோம்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் பட்டுக் கொள்முதல் நிலையம்

*வினா எண் 25—திரு. க. ரங்கசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தாலூகாவில் உற்பத்தி செய்யப்படுகிற பட்டை அரசே கொள்முதல் நிலையத்தை ஏற்படுத்தி வாங்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : : *(அ) இல்லை.*

(ஆ) வினாவிற்கு இடமில்லை.